
விலை
300/=

# வாசல்

கவிதைக்கான காலாண்டு இதழ்

வாசல் : 1 ஆடி - புரட்டாசி 2023 வருகை : 2



உலக கவிஞர்களை ஒருங்கிணைக்கும் வாசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது கவிதை இதழை அலங்கரிக்கும் கவிஞர்கள்

1. செல்வதியம்மா
2. மல்லிகைவாணன்
3. சந்திரா மனோகரன்
4. பொலிகை ஜெயா
5. ஜெயசிறி செல்வம்
6. முகில் தினகரன்
7. கௌ.மோகனா
8. சாந்தி சரவணன்
9. பாரதி மைந்தன்
10. ஆர்த்திகா சுவேந்திரன்
11. ஜோ. அனஸ்ரி
12. ஜி. ஸப்றா
13. கவிதா பிருத்வி
14. வேலணையூர் ரஜிந்தன்
15. ஷெல்லிதாசன்
16. சூரியகுமார் பார்த்தீபன்
17. கிண்ணியா சபீனா
18. கொ. ராமகிருஷ்ணன்
19. இரா. ஜெயக்குமார்
20. கவிதா லலித்குமார்
21. இ. பிரதீஸ்காந்த்
22. வெலிமடை ரபீக்
23. லலிதகோபன்
24. அ. அரசரெத்தினம்
25. சேனையூர் அ.அச்சுதன்
26. வினாயகமூர்த்தி அபிவர்ணா
27. ச. திருச்செந்தூரன்
28. விக்கி நவரட்ணம்
29. து.பா. பரமேஸ்வரி

களம்

30. பாரதியின் காதலி
31. சங்கவி இரவிச்சந்திரன்
32. மு.ப. மிஹ்னாஸ் சீபா

**அட்டைப்படம் : கே.சிறிதரன்**

**மூலமும் பெயர்ப்பும் : மாயன்**

**வடிவமைப்பு: மு.ஷ.மு.மஸாஹிர்**

வேற்றுமொழி வார்த்தைகள் கலந்துள்ள கவிதைகளின் தலைப்புக்கள், வரிகள் என்பவற்றை தமிழ்ப்படுத்தவும், கவிதைகளை செவ்வைப்படுத்தவும் பிரதம ஆசிரியருக்கு உரிமையுண்டு.

கவிதைகளை ச. திருச்செந்தூரன்,
பிரதம ஆசிரியர், வாசல் கவிதை இதழ்,
வாசல் வாசகர் வட்டம், 691/C, அன்புவழிபுரம்,
திருகோணமலை எனும் முகவரிக்கோ,
vaasalvaasagar@gmail.com எனும் மின்னஞ்சல்
முகவரிக்கோ, 0767687107, 0778918096 ஆகிய வட்ஸ்
- அப் இலக்கங்களுக்கோ அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசல் நோக்கு - 02

# கூழைக்கும்பிடு போடுவதற்கான காலமல்ல இது...

உலகம் தனக்கான புதிய திசை வழியை திறக்க ஆரம்பித்திருக்கின்றது. புனைவுகளால் நிரம்பிய உலகம் தனது புனையப்பட்ட ஆடைகளை தானே களைந்து அம்மணத்தை தரிசிக்க செய்ய ஆரம்பித்திருக்கின்றது.

கலை, இலக்கியவாதிகள், அரசியல் ஏஜெண்டுகள், மறைந்து நிற்கும் புலனாய்வு தரப்பினர், பொய் வேடமிடும் கனவான்கள் என அனைவரினதும் முகத்திரைகளை காலம் அவிழ்க்க தொடங்கியிருக்கின்றது.

உயிர்த்தஞாயிறு தாக்குதல்களின் திரைக்கதை, வசனம் ஊரே அறிந்திருந்தாலும் சனல் – 4 மூலம் காலம் உத்தியோகபூர்வமாக திரை விலக்கியிருக்கின்றது.

பெண்ணியவாதம் பேசும் காமுகர்கள், முற்போக்குவாதம் பேசி முழு உலகத்தை முட்டாளாக்கும் குடும்பத்தலைவிகள், வெள்ளை வேட்டி திருட்டு கனவான்கள், திருடும் காவல்காரர்கள் என தனிப்பட்ட வாழ்விலிருந்து பொதுவாழ்வு வரை எங்கும் நசியல் கள்ளர்களின் நச்சரிப்பை காலம் விரைவாக அம்பலப்படுத்தி வருகின்றது.

முகப்புத்தகம், வட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் மாற்று ஊடகங்களாக மாறி மூன்றாவது கண்களாக உருப்பெற்று பெரும் சாம்ராஜ்ஜியங்களை சரித்து வருகின்றன.

மக்களிடத்தில் நல்லவர்களாகவும், தானைத்தலைவர்களாகவும் நடித்து அதிகார வர்க்கங்களின் கால்களை நக்கி கூழைக்கும்பிடு போடுபவர்களை மூன்றாவது கண் தொடர்ந்தும் அவதானித்து அம்பலப்படுத்தி வருகின்றது.



இலக்கியகாரர்களும், அரசியல்வாதிகளும், முகப்புத்தக வீரர்களும், கனவான்களும், முற்போக்கு காரர்களும் இதை உணர்ந்து பணியாற்றினால் நல்லது இல்லையேல் காலம் அம்பலப்படுத்தும் போது அசிங்கப்பட்டு பலனில்லை.

ச. திருச்செந்தூரன்
பிரதம ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிகாலம்

காண்கின்றேன் கோலங்கள்
கலிகாலம் இதுதானோ...?
காலனவன் கைகளிலே
கைக்குழந்தை முதல்
கனவான்கள் வரை
பதறிடும் நெஞ்சத்தை பக்குவமாய்
தேற்றுகின்றேன்...
பாவிமனம் பதறுவது பாழ்பட்ட
சமூகத்தால் வீதியிலே விபத்தாம்
வீழ்ந்தவுடன் பலியாம்
காலைச்செய்தியிலே
விம்மிய வார்த்தைகள்
விரக்தியுடன்
மூடினால்
விதண்டாவாதச்செய்திகள்
வீரம் பேசிய தமிழர்
நாம் நினைக்கையில் சிரிப்புத்தான்
வாள் வெட்டுக்கும்பலால்
வாலிபன் மரணமாம்
வயோதிபப்பெண்ணை
வாயடைத்து கொலையாம்
போதிய போதையால்
பேதைப்பெண் அவலமாம்
போதாக்குறைக்கு பாலியல்
துன்பமுமாம்
கூட்டுக்குடும்ப வாழ்வும்
கூட்டாஞ்சோறு கறியும்
பாடத்திலே சேர்த்துக்கொண்டோம்
பண்பாட்டிலே மறந்து விட்டோம்

**செல்வதியம்மா**
யாழ்ப்பாணம்

# நான் கவிஞன் அல்ல...

தூண்டல்கள் ஆயிரம் ஆயிரம்
துலங்கல்களுக்காய் - என்னை
துவக்கி வைக்கின்றன...
எதார்த்தமான வாழ்வியலின்
யதார்த்தத்தை எழுதென்று..

காலச்சுமைகளோடு கருவையும்
சுமந்துகொண்டு தாய் ஓடியதும்
கரு அவிழ்ந்து - பூமியெங்கும்
நாம் ஓடியதும் - இன்று
புரியாத புதிராகிவிட்டது...

ஏதோ ஒன்றுக்காய் - நாளும்
ஓடி ஓடி
நிலையில்லா வாழ்வுக்காய்
நிலைகுலைந்த
வரலாறுகளையும்
காலமாற்றத்துக்குள் அகப்பட்ட
கருத்துக்களையும்
பின்கோல மாற்றத்தால்
சிறைப்பட்ட மனித வாழ்வையும்
வரிகளில் வடிப்பதால்
நான் கவிஞன் அல்ல.....
எமக்கு முன்னொரு...
ஜென்மம் இருந்ததாகவும்...

பின்னொரு ஜென்மம்
இருப்பதாகவும்
எனக்கு நம்பிக்கையில்லை.
கிடைத்த ஜென்மத்தை -
வாழவே
சுதந்திரம் தேடும் - எமக்கு
முன் பின் ஜென்மத்து
தேடல் எதற்கு....

உள்ளத்து கிடக்கைககளை...
கருத்துக்களாக நாளும் காற்றில்
வீசுவதாலும்....
ஏட்டில் எழுதுவதாலும் - நான்
கவிஞன் அல்ல....

**மல்லிகைவாணன்**
திருமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பாயாக!

சந்திரா மனோகரன்

நினைவுகள் நித்தியமானவை
நீங்கா வரம் பெற்றவை
முற்பிறவியில்
யார் செய்த புண்ணியமோ
தெரியவில்லை
தேளும் நஞ்சும்
பிஞ்சுக்கால்களை தீண்டியும்...
நிலைமரம்போல் கிடந்த
சடங்குகளும் மூடத்தனங்களும்
கானகக்கூத்தாடின..

முன்னொரு காலத்தில் ஒரு
துறவி தீட்டியிருந்த சம்பிரதாயம்
தொன்மம் அற்புதத்தை
நிகழ்த்துமா..?
அவைதான் காப்பாற்றிற்று
என்பது பெருவாரியானவர்களின்
வாக்குமூலம்

எது எப்படியோ
எனக்காக அவள் இன்னும்
இருக்கிறாள் !

பெருமழையிலும்
அசைவற்றிருந்தது
பழைய கல்லறை
இறக்கப்போகிறவர்களுக்காக
அல்லது
இறந்துவிடுபவர்
போலிருக்கிறவர்களுக்காக
அல்லது
இப்பொழுதே இந்தக்கணத்தில்
கழிந்து போகிறவர்களுக்காக

அதன் கருமை படர்ந்த
மேற்பலகையில் காட்டுப்பூக்களை
கொட்டிவைத்திருக்கிறார்கள்

இன்னமும்
எனக்குள் அவள் இருக்கிறாள்..!
பாடையின் நான்கு முனைகளிலும்
பாதையின் எல்லா முக்குகளிலும்
புலம்பல்கள்...
மூச்சிரைப்புகள்...

ஆனாலும்
அவள் இருக்கிறவளாகவே
இருக்கிறாள் !

நானும்
புலம்பெயர்ந்தவனைப்போலானேன்
கடலும் காற்றும் விசித்திரமாய்
தோன்றின
மணல்துகள்போல் குறுகிப்போனேன்
என் கால்கள்
சில்லிட்டுப் போயின
துலுக்கிபோல்
வந்தது மரணம்
அவள் ஒன்றாதவள் !
பிணந்தூக்கிகள் கடந்துபோய்
கொண்டிருக்கிறார்கள்

என் வாழ்க்கையின் மறுபாதியாக
அவள் இருந்துவிட்டு
போகட்டும் அப்புறம் ...
அது யாருக்காகவோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Seperation

# கலைவு

ஸெர்க்கோ பெஹாஸ்
Sherko Bekas

*If from my poems*
*You wrench away the flower.*
*From the four seasons of my poetry*
*One of my seasons will die.*

*If you exclude love*
*Two of my seasons will die.*

*If you exclude bread*
*Three of my seasons will die.*

*And if you take away freedom All*
*four seasons and I will die.*

எனது கவிதைகளில் இருந்து
நீ ஓர் மலரை பிய்த்தெறி
என் கவிதைகளின் பருவவகாலங்கள்
நான்கில் ஒன்றை நான் இழப்பேன்

அன்பை பிரித்துவிட்டால்
இரட்டை பருவகாலங்களை
இழப்பேன் நான்

தமிழில் : மாயன்

ரொட்டியை பிரித்தாயானால் என்
பருவகாலங்கள் மூன்றும்
செத்தொழியும்...

சுதந்திரத்தை பிரித்தாயானால்
பருவங்கள் யாவும் அழிந்து போக -
நானும் இறந்திருப்பேன்.

# உன் சுவாசக்காற்று

பொலிகை ஜெயா
சுவிட்சர்லாந்து

என் இருண்ட இதயத்தில்
மெழுகுதிரி - நீ
என்வீட்டு காணிப்புல்லின் செழிப்பு
கண்முன்
உன் வதனச்செழிப்போ
வன்னி நெற்கதிர் போன்று
வானம் மழையை பிரித்து
பூமிக்கு தள்ளியது
என் சுவாசத்திலிருந்து
பிரிக்கமுடியா ஆயுள் கைதி - நீ
உன் கொடியிடை கண்டு
என்னிதயம் கடலளவு மகிழ்வில்...
மேலே ஒற்றை வானம் இடையில்
உன்மேல் படரும் பாரியின்
முல்லையாக - நான்...
உலர் காற்றிருந்தும்
உன்
மேனியின் நறுமணம்
என் நாசித்துவாரத்தில்...
நட்சத்திரம் கண் சிமிட்ட
தாமரையிலைகள் பாய் விரிக்க
அதன்மீது தாலாட்டுவேன் - உனை...
முத்தத்திற்கு மரணமில்லை அது
கசப்பதுமில்லை...
உன் இதழ் முத்தத்திற்கு

ஈராண்டல்ல ஈராயிரமாண்டு
காத்திருப்பேன் - அன்பே...
உன் சுவாசக்காற்றற்ற என்னிதயம்
என் கனவை நிராகரிக்கிறது...
நான் உயிர் வாழ்ந்திட - உன்
சுவாசக்காற்றொன்றே போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகில்கள்



நீல வான கடலில் - இவள்
நீந்தி திரியும் குமரி
ஆடை கலைந்த மேனி - இவள்
அழகை கண்டு வியப்பீர்...!

வாடை தென்றல் தழுவும்
இவள் வதனம் மெல்ல நழுவும்
நாணம் கொள்வாள் இதமாய் தன்
நடிப்பை காட்டி மறைவாள்
ஆணை கவரும் தாரகை - தனி அழகு
கன்னி மேனகை
காதல் கொண்டு இவளை - பின்
காண வருவோர் பல பேர்
தன்னை கரைத்தே சிரிப்பாள் - பின்
தாகம் தணிந்து மகிழ்வாள்

பூமியை காதல் செய்வாள் - தன்
புன்னகை கண்ணீரை அழிப்பாள்
மக்கள் தாகம் தீர்க்க - இவள்
மண்ணிற்கு விரைந்தே வருவாள் புதிய
கருவை சுமக்க - மீண்டும் புறப்பட்டு
செல்வாள் மேலே...!

**ஜெயசிறி சிறிசெல்வம்**
மூதூர், திருகோணமலை.



திருகோணமலை மூதுரை சேர்ந்த இவர், பொன்னந்தி என்னும் புனைப்பெயரில் கவிதை, சிறுவர் பாடல், கும்மிப்பாடல், சிறுகதை எழுதி வருகின்றார்.

கவிதைகளை பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளுக்கு எழுதுவதுடன், மன்றங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வானொலிகளிலும் கவி பாடியும் வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுகோலும் எழுத்தும்!

எண்ணும் எழுத்தும் பொதுமை
என்றுமதில் வேண்டும் புதுமை!
மண்ணின் மாண்பினை செதுக்கும்
முறைமை எழுத்தின் முழக்கம்!
பண்ணில் பண்பாட்டுச்செறிவு
படையலாய் பொதிதல் அறிவு!
புண்தரும் புலமை பாவம்
புனிதம் பேணுதல் பீடம்!

ஆபாசம் இல்லா எழுதுகோல்
ஆண்மை வளர்க்கும் அளவுகோல்!
கோபம் தூண்டா குணவரியே
குடும்பம் காக்கும் குணவதியாம்!
பாபம் உரையா படைப்பு
பாரில் வளமை புடைப்பு!
தீபச்சுடராய் நிமிர்வு தீங்கினை
சாடும் பகிர்வு!

அடக்கம் எழுத்தில் இருந்திட
அமைதி விரிந்தே கிடக்கும்!
இடக்காய் கருத்து கூறிட
இடியாய் எதிர்ப்பே பீறிடும்!
முடக்கும் சோம்பலை எரித்திட
முயலும் ஆக்கம் மந்திரம்!
கடக்கும் பாதைகள் யாவிலும்
கருணை விதைக்கும் எந்திரம்!

வேங்கைச்சீற்றம் இருப்பினும்
வெண்பனிக்குளுமையும்
சேரணும்!
ஆங்கோர் ஜீவன் அமைதியுற
அறநெறி கருத்தும் கூறணும்!
ஓங்கிக்கூறும் உயர்கருத்தால்
ஒடுக்கம் பெற்றோர் உயரணும்!
நீங்காது வாசித்தோர்
நெஞ்சஞ்தனில் நிலையாய்
நின்றே வாழணும்!



முகில் தினகரன்
கோவை, தமிழ்நாடு.

தமிழ்நாட்டின் கோவையை சேர்ந்த கவிஞரான இவர், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், எழுதியுள்ளார். இதுவரை 300 இற்கும் மேற்பட்ட கவிதைகளையும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 137 நாவல்களும் எழுதியுள்ளார்.

27 ஆண்டுகளாக இயங்கிவரும் கோவை வசந்த வாசல் கவி மன்றத்தின் செயலாளராகவுள்ள இவர் 50 இற்கும் மேற்பட்ட விருதுகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவெல்லாம் நீ



நெஞ்சை நிறைத்தவள்
நேசத்தை தந்தவள்
கொஞ்சல் பேச்சாலே
குதூகலித்து இருந்தவள்

மனதோடு இணைந்தவள்
மகிழ்வை தந்தவள்
நித்தமும் என்னோடு
துயரை பகிர்ந்தவள்

காதலால் என்னுள்
காவியம் வரைந்தவள்
மோதல் செய்தென்னுள்
முழுதாய் புகுந்தவள்

உயிருள் கலந்தவள்
நீங்காது நிறைந்தவள்
நினைவெல்லாம் அவளாகி
பேரன்பின் நிழலானாள்



கௌ. மோகனா

திருகோணமலையின் கிண்ணியா ஆலங்கேணி என்ற அழகிய கிராமத்தை பூர்வீகமாகக்கொண்ட மோகனா கௌரிதாசன் பாடசாலை காலத்திலேயே வாசிப்பு மீது ஆர்வம் கொண்டவர்.

ஈரம் தேடும் வேர்கள் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். இளங்கவி என்ற பட்டத்தினையும், கவித்தேன், கலைமணி, கவிப்புனல் விருதுகளையும் பெற்றுள்ள இவர், 2021 இல் கிண்ணியா பிரதேச இலக்கிய கவிதைப்போட்டியில் முதலாமிடமும் பெற்று சிறப்பாக எழுத்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல்

வினாக்கள் விடையை தேடிக்கொண்டு இருக்கின்றன!
விடைகளும் வினாக்களை தேடிக்கொண்டு இருக்கின்றன!

காதல் காதலர்களை தேடிக்கொண்டு இருக்கின்றது!
காதலர்களும் காதலை தேடிக்கொண்டு இருக்கிறார்கள்!

இலக்கியவாதி இலக்கியத்தை தேடிக்கொண்டு இருக்கின்றான்!
இலக்கியமும் இலக்கியவாதியை தேடிக்கொண்டு இருக்கின்றது!

அரசியல்வாதி அரசியலை தேடிக்கொண்டு இருக்கிறான்!
அரசியலும் நல்ல அரசியல்வாதியை தேடிக்கொண்டு இருக்கின்றது!

கலைஞன் கலையை தேடிக்கொண்டு இருக்கிறான்!
கலையும் கலைஞனை தேடிக்கொண்டு இருக்கின்றது!

மருத்துவர் மருத்துவத்தை தேடிக்கொண்டு இருக்கிறான்!
மருத்துவமும் நல்ல மருத்துவரை தேடிக்கொண்டு இருக்கின்றது!

மனிதன் இறைவனை தேடிக்கொண்டு இருக்கிறான்!
இறைவனும் மனிதனை தேடிக்கொண்டு இருக்கிறான்!

நீ தேடும் பொருள்
உன்னை தேடிக்கொண்டு இருக்கின்றன

ஆதலால்
நல்ல தேடலை தேர்வு செய்!
நலமாய் வாழ!
வளமாய் வாழ!



திருமதி. சாந்தி சரவணன்
அண்ணா நகர் மேற்கு, சென்னை, தமிழ்நாடு

இந்தியாவின் தமிழ்நாடு சென்னையை சேர்ந்த திருமதி சாந்தி சரவணன் தனியார் நிறுவனத்தில் 20 வருடங்கள் முகாமையாளராக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றுள்ளார். திரு.அ.உமர் பாரூக் அவர்களின் வழிகாட்டலில் வாசிப்பு, சிறுகதை, ஹைக்கூ, கவிதை என ஒரு படைப்பாளியாக படைப்புலகில் ஈடுபட்டு வருகின்றார். இவர் எழுதியுள்ள கவிதைகள், சிறுகதைகள் உள்ளிட்ட படைப்புக்கள் தமிழகத்தின் முன்னணி ஊடகங்களில் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை உளதே

– பாரதி மைந்தன்
மந்துவில் - புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு

சாதிக்க துடிக்கிறேன்
வாழ்க்கையில் நானும் ஏழ்மை
தடுத்திடவே..!

தன்னம்பிக்கையை கொண்டே
கடந்தே செல்கிறேன்.

திறமை உண்டு சாதிக்க நானும்
துணிந்தே தொடர்கிறேன்

பணத்தை மதிக்கும்
கூட்டத்தினால் இங்கே
வீழ்த்தவே படுகிறேன்

சாதிக்கும் எண்ணத்துடனே
மீண்டும் எழுகிறேன் பயணம்
தொடரவே...

துணை வர அழைத்தே நின்றேன்
உறவுகளை இங்கே...
பலர்
பதிலே சொல்லாது
கடந்தே சென்றனர்.

பலர் தூற்றினர் சிலர்
வீழ்த்தவே திட்டங்கள் தீட்டினர்

மறை முக பேச்சுக்களால்
பெயரை கூட இங்கே நாசம்
செய்கின்றனர்

அனைத்தையும் கடக்கிறேன்
நான் நானாகவே பயணிப்பதால்...



கதைப்பவன் கதைக்கட்டும் நம்புபவன்
நம்பட்டும் அறிபவர் அறிவர்
என்னை...

துணிந்தே கடக்கிறேன் என்
பாதையை சிறப்பாய் அமைக்கவே...

சாதிக்கும் எண்ணத்துடன் ஒருநாள்
நானும் சாதித்தே காட்டுவேன்
உங்கள் முன்னே...

அன்புடனே தொடர்கிறேன் சாதிக்க
எண்ணும் உறவை வளர்க்க
துணையாய் நானும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் வரும் வழி!

ஆர்த்திகா சுவேந்திரன்
திருகோணமலை

உன்னை பார்க்கத்தானடா
உள்ளமெல்லாம் பூரிப்பு!
உன் குரல் கேட்கத்தானடா
உள்ளூர எதிர்ப்பார்ப்பு!

நீ வந்து முன் நிற்கும் கணம்
எப்படி ஆகுமோ?
நீ வந்து பேச்சு கொடுக்கும் தினம்
என்னென்ன நேருமோ?

படத்தில் காட்டுவது போலே
பூவுடன் வந்து நிற்பாயோ?
புத்தகம் இவள் உயிரென்று
பலவாய் வாங்கி வருவாயோ?

தைரியமாய் முன் வந்து நின்று
இவள் கோபம் துறப்பிப்பாயோ?
மெதுவாய் ஒளித்து நின்று
இவள் எண்ணமறிய
துடிப்பாயோ?

உன்னைக்கண்டதும் இதயம்
உடைந்து எழுந்து பறக்குமோ?
உலகம் இருப்பதை மறந்து
உறைந்து பேயறைந்து நிற்குமோ?

உன்னோடு மட்டும் தயக்கமற்று
இயல்பாய் அனைத்தும்
பேசுவேனோ? உன்னை வாழ்வின்
எல்லைவரை
இதயத்தில் ஆழமாய்
நேசிப்பேனோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையல் கலையும் சமூகத்தில் தையல்களும்

ஜோ. அனஸ்ரி
மூதூர், திருகோணமலை.

கைத்தொழில் ஒன்றை
கற்றுக்கொள் கவலைகள்
உனக்கில்லை ஒத்துக்கொள்.
ஆழமான வார்த்தையின்
அர்த்தம் உணர்ந்து கொள்ள
வேண்டியோர் நாமே.
சமூகத்தையலாய் வலம்
வரும் பெண்களுக்கெல்லாம்
ஆணிவேராயிருப்பது தையல்
கலையே.
படித்தும் வேலையின்றி
கல்வியறிவின்றி
கவலையோடிருக்கும்
ஒவ்வொரு பெண்களின்
வாழ்விற்கும்
ஒளியேற்றுவதில்
தையல்கலைக்கு சிறப்பிடமே.
கணவனை இழந்தும்
கைவிடப்பட்டும் தனித்து வாழ
வேண்டிய கட்டாயத்தில்
வலம் வரும்
பெண்களுக்கு
வழிகாட்டியாய் தெரிவதும்
தையல் கலையே.
பொருளாதாரத்தில்
தாலிகட்டிய கணவனுக்கு
இயன்ற வருவாயை
பெற்றுக் கொடுப்பதில்



தன் கையே தனக்குதவி என்பர்.
இந்த வார்தைகளுக்கு வித்தாய்
அமைவதும் தையல் கலையே
இலைகளை ஆடையாய்
அணிந்த ஆதாமேவாள் தொட்டு
இன்றுவரையும் மங்காதொளி
வீசுவது தையல் கலையே.
தொடர்ந்தும் அதனொளி
தெரிந்து
கொண்டேயிருக்குமென்பதும்
உண்மையே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்திரை விழுகின்ற கணப்பொழுதே..!

விழித்திரை விழுகின்ற கணப்பொழுதே
நாவிலி பார்வை நம்முள் ஈர்த்ததோ
நம் உடலறியா உணர்வுகள் கலந்தனவே
உதிரத்தில் உருவெடுத்த விழி நீரோ - நீ

ஆழி நீரோடு சேர்ந்திடும் மேகத்துளிகளை போல்
காலம் கடப்பினும் வீழாத தூரத்து நிலவைப்போல்...

சுமை தாங்கிடும் இந்த பூவுலகில்
என்னை தாங்கிடும் தாய்மடியானாயே
தனிமைக்கு ஒரு காரணம் இல்லையே
துணை தேட இங்கு வாய்ப்பும் இல்லையே....



மழை நீரை தாங்க வந்த குடையாய்
என் விழி நீரை தாங்க வந்தவளோ - அவள்
நட்பிற்கு ஓர் இலக்கணமாய்
நான் அறியும் கண்ணல் புதிரோ - இவள்

நினைத்தால் இனிக்கும் இளமை நதியே என் விழி
பார்க்கும் இடமெல்லாம் நீயே

கருநிறமாக இருந்த என் நிழல் விண்மீனாய் நீ
ஒருவெடுக்க வெளுத்ததோ! போகும் பயணத்தில்
தொடரும் நிழலாய்
எங்ஙனமும் பின் தொடர்வாய் என் தோழியே...

ஜி. ஸப்றா
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ கவிதைகள்



சம்மட்டி பிடித்த கரங்கள்
வகுப்பு அறையில்
பேனா பிடிக்கும் சிறுவன்!

காலை செய்தித்தாள்
போடும் சிறுவன்
வீட்டில் குடிகார தந்தை!

பசி வேளையில் வேலை
ஊழியர் பசியோடு விரைகிறார்
உணவை டெலிவரி செய்ய!

எம்மதமும் சம்மதம்
காதலின் வெற்றி
மதவெறி தாக்குதல்!

துறவி மேல் அமராமல்
பறக்கிறது பட்டாம்பூச்சி
மரத்தடியில் எறும்புகள்!

சாதி மத பேதமில்லை
மேடையில் பேச்சு
ஓயவில்லை ஆணவக்கொலை!



**கவிதாயினி கவிதா பிருத்வி**
தமிழ்நாடு

தமிழ்நாட்டின் தஞ்சாவூரை சேர்ந்தவர் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அறம் கிளை உறுப்பினராக உள்ளார். ஹைக்கூ கவிதைகள் எழுதுவதில் ஆர்வமுடையவர்.

"ஓவியம் வரையும் தூரத்து நிலா" என்ற எனது ஹைக்கூ கவிதை நூலினை அகநி வெளியீடாக வெளியீடு செய்துள்ளார்.

இந்த நூல் கடந்த ஜனவரி மாதம் சென்னையில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியில் ஓவிய கவிஞர் அமுதபாரதி, அறம் கிளை தலைவர் தோழர் உமர் பாரூக், அகநி கவிஞர் மு.முருகேஷ், எழுத்தாளர். காமுத்துரை தோழர் ஆகியோரின் முன்னிலையில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீக்கமற நிறைந்து

வேலணையூர் ரஜிந்தன்
யாழ்ப்பாணம்

தகதகக்கும் கோடையை சுமந்து
பளபளத்து பறக்குதொரு
பட்டாம்பூச்சி

படபடத்து வீசும் காற்றில்
தகதிமியென நடனமிட்டு
குதிக்கின்றன பழுத்த சில இலைகள்


வெய்யில் கம்பளம்
போர்த்திய பெரு விருட்சத்தின் மடியில்
உறங்குகிறது அழகிய தண்மை

இறக்கைகளை கோதிக்கோதி
அன்பினை வியாபிக்கின்றன
கிளையேந்திய அவ்விரு பட்சிகள்

புழுதி உடுத்திய
இலையுதிர் மரமெல்லாம்
காத்துக்கிடக்கின்றதோர்
உகைப்பு மழைக்காக

மிதந்து போகுமந்த
பருந்தின் நிழலை
பருகுதங்கே வரண்ட மேடு

முற்றிலும் வரட்சி மேவிய
எண்திசையும்
நீக்கமற நிறைந்திருக்கிறது
கானல் நீரால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதும் அறியாத சின்னப்பிள்ளை

ஷெல்லிதாசன்
திருகோணமலை



ஏதும் அறியாத சின்னப்பிள்ளை..!
சேதி தெரியுமா சின்னக்கண்ணு !
நம்ம செங்கமலத்தின்ரை புருஷன்
சிவராசன் இருக்கிறானே
சின்ன வயதிலையிருந்து அவன்
செல்லமா வளந்த
ஒரே பிள்ளையாம்..!

இந்த விலைவாசி ஏத்தத்திலையும்
சீனி விலை பருப்பு விலை
அரிசி மரக்கறி மீன் விலை எண்டு
எந்த விலையும் அவனுக்கு
இதுவரையிலும் தெரியவே
தெரியாதாம்..!

உடுத்த உடையைக்கூட ஒரு
நாளும்
தோய்த்து அறிய மாட்டானாம்
படுத்த பாயைக்கூட பாவம்
சுத்திவைச்சு பழக்கமில்லையாம்..!

வேலை வெட்டியெண்டு ஏதும்
செய்து அறியானாம்
எந்த நேரமும் மனிசியை
குழந்தைப் பிள்ளையைப்போல
சுத்தி சுத்தி வாறானாம்..!

விளையாட்டுத்தனமும்
இன்னும் அவனை விட்டு
விலகவில்லையாம்..!

ஆனாலுமடி சின்னக்கண்ணு
பாரடி

இரண்டு வருஷத்துக்குள்ளை
பிள்ளையள் இரண்டுக்கு
தகப்பனாமடி....
அது மாத்திரமே இப்ப
மூண்டாவதும் வயித்திலையாம்...!

பாவம் சிவராசன்...
ஏதுமறியாத சின்னப்பிள்ளை..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் அறிமுகம் – 1

## ஓர் ஊரில் ஓர் ராசா கதைகள்

நதியோடு படரும் கொடிக்கு
துணையென்று ஏதுமில்லை
நதியோடும் போக்கில்
அலைவதன்றி - அதற்கு வேறு
வழியுமில்லை

குழந்தையோர் கொடியென்றால்
நதிதான் எதுவாகும்?
நல்தாத்தாவும் பாட்டியும்
அதுவாகும் - அன்றேல் நதியற்ற
கொடியாய் நன்னீரற்று வரண்டு
போகும் கொடியின் வாழ்வு.

தாலாட்டும் தென்றலென்றால்
தலை துவட்டும் மேகமொன்றால்
ஆகாதோ ? தாத்தா பாட்டியுறவு

சீராட்டும் தாய்மை சீர்தூக்கி
பார்த்ததுண்டோ?
சேய் பின் நாளில் - தன்னை
சீர் காக்குமென்று - ஆனாலும்
அள்ளியே பொழியும் அன்பை
யார் கண்டதுண்டு..?

பின்னாளில் - முதியோர்க்கென்று
ஓர் இல்லம் முளைக்குமென்று

நாமெல்லாம் வளர்ந்த பின்
நற்தாயும் தந்தையும்
தேவையற்றவோர் பண்டமாகலாம்.
தேயுமோ நம் குழந்தைகளின்
தாத்தா பாட்டி தேவை?

நான் எப்போதோ. தொலைத்த
தாத்தா பாட்டியின்
"ஓர் ஊரில் ஓர் ராசா கதைகளை"
என் மகன்வீட்டு திண்ணை
முழுதும் தேடித்திரிகின்றான்

அவற்றையெல்லாம்
எப்போதோ முதியோர் இல்லம்
அனுப்பிவைத்த - நான்
மௌனித்து கிடக்கிறேன்
வீட்டு மூலையில்...

சூரியகுமார் பார்த்தீபன்
மட்டக்களப்பு

உள்ளூராட்சி உதவி ஆணையாளராக பணியாற்றிவரும் இவர், கலை, இலக்கியங்களில் ஆர்வம் கொண்டவராவார். கவிதை எழுதுவதிலும் ஆர்வம் கொண்ட இவர் எழுதிய முதலாவது கவிதை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏந்தும் கரங்கள்

ஏந்தும் கரங்க ளென்றும்
இன்பம் காண மாட்டாதே!
சாந்தம் அடையும் நிலையில்
சற்றும் சந்தம் கொள்ளாதே!
நீந்தும் துன்பக்கடலில்
நித்தம் வலிகள்
பொறுத்திடுமே! காந்தம்
போலக் கவர்ந்த
கவலை வாட்டும்
மனத்தினையே!

உழைக்கும் மனித னுலகில்,
உயர்வா யுலாவி மகிழ்வானே!
பிழைக்கத்தெரிந்த பெருமை
பெற்று கொடையும்
கொடுப்பானே! அழைத்தே
உணவை அளிக்கும்,
அகத்தோர் புகழு
மோங்கிடுமே! உழைக்கா
நிலையில் இரந்தே, உண்ணு
முலகோர் பிழைப்பாரே!



வறுமை நிறைந்தும் நலங்கொள்
வளங்கள் குறைந்தும்
இருப்போர்க்கு, உறுத்து முளமும்,
சுயமாய் உழைத்தே உண்ண
விரும்பிடுமே! பொறுமை இருந்தும்
பசிக்கு, புசிக்க
கரத்தை ஏந்துவோர்க்கு,

மறுப்புக்காட்டி நகைக்கும், மாந்தர்
உலகில் உள்ளனரே!

கிண்ணியா **சபீனா**
திருகோணமலை



வாசல் கவிதை இதழ் புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தவுள்ளது. முதன்முதலில் எமது கவிதை இதழில் கவிதை எழுதும் கவிஞர்களின் கவிதையை களம் பகுதியில் பிரசுரித்து அவர்கள் தொடர்பான முழுமையான விபரங்களை "கவிஞர் அறிமுகம்" எனும் பகுதியில் பிரசுரிக்கவுள்ளோம்.

எனவே புதிய கவிஞர்கள் தாம் முதன்முதலில் எழுதிய கவிதை என்பதை உறுதிப்படுத்தி பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் தம்மை பற்றிய விபரங்களுடன் ச.திருச்செந்தூரன், பிரதம ஆசிரியர், வாசல் வாசகர் வட்டம், 691/C, அன்புவழிபுரம், திருகோணமலை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை இனிது!

விண்ணை எட்டும் நீண்ட மரங்கள்
வெற்றிடம் எங்கும் வருடும் புற்கள்
கனிகள் செழித்த கானகக்கூட்டம்
கள்ளிச்செடிகளின் கர்வத்தேரோட்டம்



நலமுடன் வாழ்ந்திட மூலிகை பயிர்களும்
நட்புடன் பழகிட காக்கை குருவியும்
குதித்து மகிழும் அழகு பொன்மான்களும்
களிநடனம் புரிந்திட கண்கவர் மயில்களும்...

மண்ணில் உயிர்கள் பல்கிப்பெருகிட
மேகக்கரங்கள் மழைநீர் பாய்ச்சிட
காலம் அறிந்து கனிகள் வெளிவர காட்சிகள்
அனைத்தும் கணக்காய் நடைபெற
மாக்கடலாய் விரிந்த இயற்கையின் வனப்பு

படுபாலையாய் தகிக்கும் மணல்வெளி விரிப்பு
எரிமலைக்குழம்பாய் கொதித்து பாயும்
எக்காளமிட்டு மழை அருவியும் கொட்டும்

எறும்பு யானை சிங்கம் புலியென எல்லாம்
மகிழ்வுடன் இணைந்தே வாழ்ந்திட
இருப்பவை யாவும் பொதுவாய் பயன்தர
இன்னல்கள் இடர்கள் இயற்கையின் இயற்கை




இரவும் பகலும் இவைதனை உணர்த்த
இன்பமும் துன்பமும் இயல்பாய் கடக்க
இயன்றதை என்றும் பிறருக்கும் ஈந்து
இணங்கி வாழ்வோம் மனிதம் செழிக்க!

**கொ.ராமகிருஷ்ணன்**
பழனி, தமிழ்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்தது தமிழர் நூலகமல்ல...!





எரிந்தது தமிழர் நூலகமல்ல...!
அந்நியர் ஆட்சியிலும்
அவனியிலே நிமிர்ந்ததனால்
புகைந்திருந்த நெருப்பு!

எரிந்தது தமிழர் நூலகமல்ல...!
தமிழ் பெரு விருட்சத்தின்
உரிமைக்கு உயிரூட்டும்
தொன்மை மிகு வேர்கள்!

எரிந்தது தமிழர் நூலகமல்ல...!
கல்விமலைச்சிகரத்தில்
கலைகள் பல வளர்த்த
தமிழர் தம் ஏணிகளே...!

எரிந்தது தமிழர் நூலகமல்ல...!
பஞ்ச சீலங்களை
பாருக்கே படைத்தளித்த
போதிமாதவன் போதனைகளே!

(யாழ்ப்பாண பொது நூலகத்தில் இருந்த ஒரு லட்சம் அறிவு பொக்கிசங்கள் தென்னிலங்கையில் இருந்து வந்தவர்களால், 1981.06.01 இல் எரிக்கப்பட்ட நினைவாக...)

**இரா. ஜெயக்குமார்**
உரும்பிராய், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணியாளும் என் தாய்த்தமிழ்

சங்கத்தமிழ் எடுத்து
சரித்திரத்தமிழ் தொடுத்து
வங்கக்கடல் தாண்டி
ஒலிப்பது என் தமிழ்

அண்டை தேசத்தின்
அந்நியராட்சியில்
அழிந்திடாது தலைநிமிர்ந்து
நின்றதும் என் தமிழ்

இயற்றமிழாய் இசைத்தமிழாய்
நாடகத்தமிழாய்
முத்தமிழென எங்கும்
முழங்கிடும் என் மூச்சான தமிழ்

எது இல்லை என் தமிழில்
எவர் வெல்வார் என் தமிழை
கல்தோன்றி மண்தோன்றா
காலத்தே வாளொடு
முன் தோன்றியது
எந்தன் மூத்த தமிழ்

இலக்கியமும் இலக்கணமும்
இயைந்த தமிழ்
இனிமைகளால் நிறைந்த
என் தீந்தமிழ்

திக்குத்தெரியாத காட்டிலும்
எனக்கு பக்க பலமாய்
நின்றிடும் பைந்தமிழ்...




திருமதி. கவிதா லலித்குமார்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்து வா...

இந்த பரந்த உலகில்
வாய்ப்புக்கள் நிறைந்தே
இருக்கிறது

வானமும் பூமியும் வாழ்க்கைக்கு
ஒன்றை மட்டும் உரத்து
உரைக்கிறது

தேடு - நீ
தேடிக்கொண்டே இரு
இயற்கையின் தொடர்ச்சி
எவ்விடத்திலும்
முற்றுப்புள்ளியாவதில்லை
அதுபோன்றே
உன் இலக்கிற்கான கனவின்
பயணமும் அமையட்டும்

நீ சிலவேளை
வஞ்சிக்கப்பட்டிருக்கலாம்
வதைக்கப்பட்டே
தனிக்கப்பட்டிருக்கலாம்
வண்ணமான
உன் மனதை கருமையால்
சில கணங்கள்
நிறம் தீட்டியிருக்கலாம்

ஆனாலும்

நீ பிறந்த கணம்
உன் அன்னை
தன் மார்போடு அணைத்து
நிச்சயம் நீ உச்சம் தொட்டே
உலகில் மிளிர்வாய் என்று
நம்பிக்கை கொண்டிருப்பாள்


ஆதலால்
நகர்ந்த நாட்களின்
கணங்களை
மீண்டும் கணக்கிடாதே

நாளை ஓர் நாளில்
உன் குரல் எனும் ஆளுமைக்கு
இவ்வுலகு

தன்னை நிறுத்தி பதில்
சொல்லும் வரை போராடு

பட்டை தீட்டும் வரைக்கும் தான்
பட்டறையில் வைரம் இருக்கும்
அதன் பின்
அது
இருக்கும் இடமும் அதை
பார்க்கும் விதமும் மாறுபடும்

உன்னால் முடியும்
எழுந்து வா
சாதனை படைப்போம்...



**இ. பிரதீஸ்காந்த்**
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையின் நவீன கவிதை நாயகர்கள்



பாகம் 01

திருமலை நவம்

ஈழத்து நவீன கவிதை மரபொன்று வடபுலத்தை தளமாகக்கொண்ட புலமைமிக்க கவிஞர்களான நாவற்குழியூர் நடராஜன், அ.ந.கந்தசாமி, சோ.நடராஜா, மஹாகவி போன்றவர்களின் பங்களிப்பு முன்வைத்த நிலையில் ஈழத்துக்கான தனிமரபு முறை கவிதை வளர்ச்சியொன்று உருவாகிக்கொண்ட காலம் 1940 ஆண்டுக்கு பின்னாகும்.

இந்திய சுதந்திர போராட்டத்தை முன்பின் அண்டிய காலத்தில் மஹாகவி பாரதி, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தேசிய விநாயகம் பிள்ளை, சுத்தானந்த பாரதி போன்றோரின் வருகையுடன் தமிழில் நவீன கவிதை மரபொன்று கொடிகட்டி பறக்கத்தொடங்கியது.

20 நூற்றாண்டின் நவீன கவிதை வளர்ச்சிக்காலமான 1950 ஆம் ஆண்டுகளை தொடர்ந்து திருகோணமலை மரபுவழி கவிஞர்களான அறிஞர் அகிலேசபிள்ளை (1853 - 1910) தி.த.கனகசுந்தரம்பிள்ளை (1863 - 1922) தி.த.சரவணமுத்துப்பிள்ளை, தம்பலகமம் வீரக்கோன் முதலியார், புலவர் மா முத்துக்குமாரு அப்பாத்துரை குருக்கள், ஆசுகவி முருகையன் போன்ற தலைமுறை கவிஞர்களுக்கு பின் திருகோணமலை பிரதேசத்தில் நவீன கவிதை வடிவமொன்று உருவாக வித்திட்டவர்கள் என்ற வகையில் தருமு சிவராமு, அண்ணல், ஈழவாணன், திருகோணமலைக்கவிராயர் ஆகியோர் முன்னோடிகளாக இருந்துள்ளனர். வட புல கவிஞர்களின் அறிமுகம், பாரதி, பாரதிதாசன் போன்றவர்களின் தேசிய மற்றும் தமிழ் உணர்வுகள் திருகோணமலை முன்னோடி கவிஞர்களை அதிகம் பாதித்தமைக்கு இன்னொரு காரணம் சுவாமி விபுலானந்தருக்கு பாரதி பாடல்களில் இருந்த பற்றுக்கோடும் பிரீதியும் ஆகும்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் இலங்கையின் சுதந்திரத்தின் பாதிப்புக்களின் தாக்கமும் இந்திய சுதந்திரத்தின் பாதிப்பும் ஈழத்துக்கவிஞர் குழாமை பாதித்தது போலவே திருகோணமலை முன்னோடி கவிஞர்களையும் முன்கொண்டுசென்ற நிலையில் மரபு வழி அறிஞர்களான தி.த.கனகசுந்தரம்பிள்ளை பண்டிதர், தி.த.சரவணமுத்துப்பிள்ளை ஆகியோரின் வழிமுறைப்பட்ட கவிஞர்களாக தருமு.சிவராமு, அண்ணல் போன்றோர் திருகோணமலையின் முன்னோடிகளாக திகழுகின்றார்கள்.

(வளரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் துயர்

வெலிமடை ரபீக்

காற்றிழுத்து வந்து
தொங்கவிட்டு ஓடியபின்
காப்பாற்று என
கதறிடும்
கிழிந்த பட்டமாய்
நான்...

புண் கொண்ட காலை
பார்த்தழுதேன்
புலருமா என் காலை?

செங்கம்பளம் விரித்து
அழைத்தாலும்
புண்பட்ட கால்
நடப்பது எங்ஙனம்?
சொல்...

ஏனிந்த தொல்லை?
ஆனந்தம் இல்லை
என் கல் முற்றத்தில்
பொற்காசு பூக்கும்
ஒற்றை மரமும் இல்லை.

என் வருவாய் எல்லாம்
மருந்துண்ண
நான் வெறும்வாய்...



என் டொலர்களை
நீ பறித்தாய்
என் மலர்கள் உதிர்ந்தன
என் வெப்பங்கள் குடிக்க
வெள்ளை பனித்துளியும்
இல்லா
பாலை நிலமானேன்..

# எழில் சார்ந்த எமது தேசம்...!

தெட்சண கைலாயம்
திருமலை பிரதேசம்
அட்சய பாத்திரம் இது
அனைவரையும் ஈர்க்குமிடம்.!

கோணேசப்பெருமான்
கோயில் கொண்டு வாழுமிடம்
ஞான சம்பந்தப்பெருமான்
நாவார புகழ்ந்தவிடம்.!

புனித புண்ணிய சிவபூமி
புராதன வரலாற்று புகழிடம்
மானினங்கள் உலாவரும்
வளமான பிரதேசம்.!

தமிழினத்தின் தொன்மைகளை
தக்கவைக்கும் பிரதேசம்
தற்காத்து தமிழ் மொழியை
தலை நிமிர வைத்த இடம்.!

இயற்கை துறைமுகமும்
எழில் சார்ந்த காட்சிகளும்
செயற்கை அழகும் சேர்ந்த
திருமலை தான் எமது தேசம்.!

செந்தமிழர் இஸ்லாமியர்கள்
சிங்களவர் கிறிஸ்தவர்கள்
சொந்தம் கொண்டாடி வாழும்
தொன்மையான நகரமிது.!



சுற்றுலா நகரம் இது
பற்பலரும் வந்து போகும்
பண்பாட்டு பூமி இது
அற்புதமான அழகு பிரதேசம்.!

சேனையூர் சிவஸ்ரீ அ. அரசரெத்தினம்.
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர்

– லலிதகோபன்
திருகோணமலை

கடந்த நூற்றாண்டுக்கும் இந்த
நூற்றாண்டுக்குமிடையே ஒரு
துவார இடைவெளியே
மீந்திருந்தது.

சிலுவையில் அறையப்பட்ட
கடந்த நூற்றாண்டின்
பாதங்களின் வழியே கசியும்
உதிர துளிகள்
துவார வழியே கசிந்து
இந்த நூற்றாண்டின்
பிணவறையில் படுத்திருக்கும்
என் உடலத்தில் படிந்து ஒரு
நதியென நிறைகிறது.

எனது உடலத்தின் திசுக்கள்
முள்ளிவாய்க்காலுக்கானதா
அல்லது சிரியாவுக்கானதா
என்பதில் வேர் கொள்கிறது
அவர்களின் கடலை ஞான
பயிர்கள்.

ஒட்காவின் உபயத்தில்
அவர்களின் மூளை கலங்கள்
அகற்றப்பட்ட
வெறும் சதைக்கோளமாகிறது...

புணர்ச்சி வலியில் அலறும் பெண்
நாயின் கேவல் அவர்களின்
இலிங்கங்களில்
புது இரத்தம் பாய்ச்சுகிறது.
மிகத்தீவிரமாய்
அறுக்கப்படுகிறேன் வேர்களாய்
நார்களாய்.

சன்னதம் அடங்கிய பின்னர்
சாமிகளின் அருள்வாக்கு
மீயொலிக்கப்படுகிறது.

"கடந்த நூற்றாண்டு போரொன்றில்
கொல்லப்பட்ட மனிதன்
இவனென"

துவார வெளியினூடே ஆவியாகி
கடந்த நூற்றாண்டில் பலியான
ஒருவனின் கல்லறையில்
படுக்கிறேன்.

ஆம்
நான் கூடு விட்டு கூடு பாயும்
வித்தை கற்றவன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம் நடைமுறையில் வர...!

ஊடக சுதந்திரம்
நாடு பூராவும் உலாவர
நடைமுறைப்படுத்தினால்
ஜனநாயகம் தானாக தலைநிமிரும்.!

காணாமலாக்கப்பட்ட உறவுகளின்
கண்ணீருக்கு விடைகண்டால்
ஞானோதயம் பெற - நாட்டில்
ஜனநாயகம் தானாக தலைநிமிரும்.!

இன மத பேதவாதமில்லாமல் போனால்
இலங்கையில் ஜனநாயகம்
எழுந்து தலைநிமிர்ந்து நடக்கும்
தானாக துவேசம் தலைகவிழும்.!

பெரும்பான்மை சிறுபான்மை
பேதம் பாராத சமத்துவ சமரசம்
நேராக பயணித்தால் ஜனநாயகம்
சீராக தலைநிமிர்ந்து நடக்கும்.!

ஊராளும் நாடாளும்
உயரதிகாரிகள் அரசியல்வாதிகள்
ஊழல் புரியாது செயற்பட்டால் - தலை
தாழாமல் ஜனநாயகம் தலைநிமிரும்.!

கருத்து பேச்சு எழுத்து சுதந்திரம்
திரித்துக்கூறாமல் சிறப்பாய் செயற்பட்டால்
ஒரு தலைப்பட்சமற்ற ஊடகதர்மம்
உண்மையை சொல்ல ஜனநாயக மோங்கும்.!



சேனையூர். அ. அச்சுதன்
திருகோணமலை

கவிதைகளை ச.திருச்செந்தூரன், பிரதம ஆசிரியர், வாசல் சஞ்சிகை, வாசல் வாசகர் வட்டம், 691/C, அன்புவழிபுரம், திருகோணமலை எனும் முகவரிக்கோ, vaasalvaasagar@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ, 0767687107, 0778918096 ஆகிய வட்ஸ் - அப் இலக்கங்களுக்கோ அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்து மண்வாசனை

காலைக்கதிரவன் கதிர்பட்டு
பனித்துளிகள் மீதுறங்கும் பூ
இதழ்கள் மேல் தெறித்திட
பொன்னாக பூமி தோன்றும்
அருமையே கிராம வாழ்க்கை
அவனியே வியக்கும் இயற்கை!
பருவமடைந்த பெண் போல
கதிர் முத்தி தலை சாய்த்து
நாணத்துடன் முத்தமிட
தரிசு நிலங்கள் வளமோடு
காண்பதுவும் அருமை!



செம்பாட்டு மண்ணணைத்த
வெங்காயத்தோட்டத்திலே
முக்காடு போட்ட படி
பொன்னம்மா கொண்டு வரும்
மீன் சோறு என்ன சாதி?
உண்டு விட்டால் பசி போகும்
இதுதானே உலகில் உண்மை!

கொஞ்சும் வளம் குன்றாது
பஞ்சமே என்றும் காணாது
மிஞ்சும் பொருள் தந்து
வந்தோரை வாழ வைத்து
பொங்கிய கிராம மெங்கும்
ஓங்கும் கட்டிடம் புகுந்து
அழிப்பது இன்று கொடுமை!


**விநாயகமூர்த்தி அபிவர்ணா**
மூங்கிலாறு வடக்கு, உடையார்கட்டு,
முல்லைத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பாகிறேன்...

(1)
யாரோ சொன்ன
வெள்ளைக்கொடி கட்டிய
கப்பலுக்காய்
இன்னமும் காத்திருக்கின்றோம்
கூத்தாடிகள்
குடமுருட்டிகள்
கள்ளத்தீர்க்கதரிகள்
சொன்ன
படகு வரும்...
மீட்பன் வருவான்...
என்ற கதை
இன்னமும் தொடர்கின்றது...



(2)
இரவு பகலாய்
நான் எந்தன்
மந்திர வார்த்தைகளை
சொல்லிக்கொண்டிருக்கின்றேன்
எந்தச்சாமியும்
ஒரு போதும்
எட்டிப்பார்க்கவில்லை
கல்லை
வெயர்க்க
எறும்பாய் ஊறுகின்றேன்..
பரவாயில்லை..
நானும்
நல்லவர்கள்
பலரினது
தலைப்பிள்ளைகளை
கொடுக்க தயாராகின்றோம்...
எறும்பாகிறேன்...

(3)
இருந்தும்
போதிமரத்துக்காரனின்
தத்துப்பிள்ளைகள்
இரத்தத்தை குடிக்க
கத்தியுடன் வருகின்றார்கள்
சிலர்
நவீன உடைகளுடன்
அரச இலட்சினையுடன்
சுடுகலன்களுடன்
வருகின்றார்கள்..
உயிரை காக்க
எடுத்த கடைசி முயற்சியும்
பிழைத்து விட்டது...
பார்ப்போம்
எறும்பே
தனக்கான தாய் நிலத்தை
அடைந்திருக்கின்ற போது
நாமும் அதனை அடைவோம்
அதுவெல்லாம்
இயற்கை
எனக்கு சொன்ன இரகசியம்...



ச. திருச்செந்தூரன்,
அன்புவழிபுரம், திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறம் வெளுத்த மேகம்..!

இரக்கமில்லா தோல்விகள்
அவளை அணைக்க
இளைத்துப்போன
இதயத்துடன் வாழ்கின்ற
அவள் வாழ்வில்
அரக்க மனம் கொண்ட
வாலிபர் பலரின்
சீதனம் என்ற
ஆசை பந்தலிட்டதால்
திருமணம் என்ற
மயக்கத்தை மறந்து
நிறம் வெளுத்த மேகமானாள்..
பொங்கி நின்ற ஆசைகளை
புதைத்து விட்ட நினைவோடு
தேங்கி நின்ற கண்ணீரை
சிறையிலிட்டு வைத்தவள்
நாளை மணமகளாவேன் என்ற
மயக்கத்தை துறந்து
பெருமூச்சு வெப்பத்தோடு
நிச்சயிக்கமுடியாத
திருமணத்தை நினைத்தே
மூன்று பத்து வயதாகியும்
கூந்தலில் மலரோடு வாழ்கிறாள்
நான் விதவையில்லை என்றே
மனிதத்தை உணரவைக்க....

சுவிஸ்ஸிலிருந்து
**விக்கி நவரட்ணம்**



சுவிட்சர்லாந்து நாட்டில் வசித்துவரும் யாழ்ப்பாணத்தினை சேர்ந்த விக்கி நவரட்ணம் அவர்கள் சிறந்த மேடைப்பேச்சாளர், நாடக நடிகர், கவிஞர், சிறுகதை எழுத்தாளர் என்ற பல அவதாரங்களை கொண்டவர்.

ஆகாய கங்கை என்ற கவிதை தொகுப்பு, கண்களில் ஏன்..? கங்கை..! என்ற சிறுகதைத்தொகுப்பு, "என் வாசல் வந்த கங்கை" என்ற சிறுகதைத்தொகுப்பு, "மனதுக்குள் உறங்கும் மௌனம்" என்ற கவிதைத்தொகுப்பு உள்ளிட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். வீரகேசரி உள்ளிட்ட முன்னணி பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளில் சிறுகதை உள்ளிட்ட எழுத்துக்களை இவர் தொடர்ந்தும் எழுதி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தம்

பழையதாகிப்போன
அந்த இரயில் வண்டியில்
இணைக்கப்பட்டது புதிதான சொகுசு
பெட்டியொன்று..



அடிக்கடி பயணிக்கும் பிரயாணிகளுக்கு
நவீன இருக்கை
புத்தம் புது வாசம்
முழு வீச்சில் சுற்றும் காத்தாடி
வீசாத கழிவறை
இரவுப்பயணம் அம்சமாகிப்போனது மனதிலும்
நினைவிலும்...

அந்த வொரு நாள்
தடம் இறங்கியது சக்கரம்...
புதுப்பிக்கும் பணியில்
கடத்தப்பட்டது புதுவரவு
நிம்மதி மூச்சிட்டன
பழைய பெட்டிகள்..

எங்கிருந்து பெயர்ந்ததோ
அங்கேயே சென்று விட்டது...
பிரயாண பிரியங்களின்
சொகுசுப்பெட்டி...



**து. பா. பரமேஸ்வரி**
தமிழ்நாடு

சென்னையில் வசித்து வரும் அக்குபங்சர் மருத்துவரான இவர் பாடசாலை ஆசிரியராக 8 ஆண்டுகளாக பணிபுரிந்து சமீபமாக ஆசிரியப்பணியிலிருந்து விடுவித்துக்கொண்டு தற்பொழுது முழுநேர மருத்துவராக பணியாற்றுகிறார்.


கவிதை, கட்டுரை, சிறுகதை, நூல்விமர்சனம் போன்ற தளங்களில் எழுதிவரும் இவர் இலக்கிய நூல்கள் வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். "புத்தகம் பேசுது", "காக்கை சிறகினிலே", "முத்தமிழ்நேசன்" போன்ற இலக்கிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இயல்பு

ஓர் ஆற்றங்கரையிலே ஆலமரம் ஒன்று இருந்தது.
ஓர் நாள்
ஆலமரம் சோகத்துடன் கண்ணீர் வடித்தது என்றது
ஆற்று நீரும் ஏன் அழுகிறாய்?
என் உடலில் உள்ள இலைகள் எல்லாம்
உதிர்கின்றனவே..... என்றுதான்
அழுகின்றேன் என்றது ஆலமரம்
அதற்கு ஆற்று நீர் கூறியது
ஆலமரமே உன் உடம்பில் இருக்கும் இலைகள்
உதிர்வதால் தான் - உனக்கு வசந்த காலமே -
பிறக்கும்....
என்னை பார் இத்தனை நாளும் குளம் குட்டைகளில்
இருந்து அனைவருக்கும் தாகத்தை தீர்க்கும்
குடிநீராக உபயோகப்பட்டு எல்லோராலும்
பாராட்டப்பட்டேன்
ஆனால் இப்போது...
என்னை மட்டுமல்ல எண்ணில்லா பல
இயற்கைகளையும் கற்பனை செய்து பார் உமக்கே
எல்லாம் புரியும்
பூ மொட்டுக்கள், மெதுவாக தங்களுடைய
இதழ்களைத் திறந்து
புதியதொரு உலகத்தை எட்டிப்பார்த்தனர்
ஓர் மாமரத்தின்
அசைவால் கூட்டில் இருந்த கிளிகள் துயிலில்
இருந்து விழித்துக் கொண்டன சேவலின் கூவல்
சத்தத்தை கேட்டு லயங்களில் இருந்து கதவுகள்
திறக்கப்பட்டன
சில்லென்ற காலைத்தென்றல் உடலை
உற்சாகமூட்டியது



- பாரதியின் காதலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயசிந்தனை வீச்சு

கற்றறிந்தவர் சிலர் பட்டறிந்தவர் பலர்
பாமரரோ பண்டிதரோ தாயை தொட்டறிந்தவருளர்
தனித்து நின்று சத்தியத்தால் தலை நிமிரும் மனிதன்
நிறை மதி தன் துணை கொண்டு செயலாற்றும் அறிஞன்

நடைபயில கலைபயில வினை புரிய
கல்வி தனை அறிய சுயம் உணர
சொற்களை தொடுக்க முன் அறிந்த
மழையில் மொழிந்திடுவீர் சுயசிந்தனைதனை

தாய் தந்த வரம் மழலை
மனம் சொன்ன கனம் செயலை
செய்தால் நீ உருவாக்குவாய் கனவை
இன்றும் நினைக்கிறேன் தேசிய தாய் அவளை

கற்றவரும் மற்றவரும் மறையவரும் ஆன்றோரும்
சிந்தை வென்று சுயசிந்தை கொண்டியன்றால்
தேசம் நம்மை போற்றும் - நம்
தேசியம் எனும் விருட்சம் மலரும்

தேசியம் அழகாக சிந்தையுடன் எழுந்திடுவீர்
சிந்திக்க சிந்திக்க சிகரமதை தொட்டிடுவீர்
தேசியம் அழகாக சிந்தை உரமாகும்.
அழகானது சிந்தனை திடமானது யோசனை




சுயமாக பேசு சுதந்திரமாகும் சிந்தனை
சுயமாக நட அன்றேல் பிணமாக கிட
சுயேட்சையுடன் எழு சுபீட்சம் உண்டாகும்
தேசியம் பொலிவுறும் சுதந்திரமும் பிறந்திடும்.

சங்கவி இரவிச்சந்திரன்
13 கலைப்பிரிவு
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌர்ணமி நிலா



பால் போன்ற வெள்ளை நிலா!
மேகத்தில் கண்ணாமூச்சி விளையாடுகிறது!
அதை எட்டித்தொட்டு வரவே,
கையில் முத்தம் விட்டு சென்றது!

ராத்திரி வானில் ரத்தினமாய்
மிதந்து திரியும் முழுமதியே!
இரவோடு இரவாய் மறைந்தது ஏனோ?

மானிடர் துயிலும் நேரமதில்
நீயும் நானும் பேசிடுவோம் !
விண்ணும் மண்ணும் எவ்வுறவோ
அவ்வுறவோ நீயும் நானும்!

உன்னை ஒரு முறை பார்த்தால்
பேராண்மை கூட பொறாமை கொள்ளும்
அழகுனக்கு!
அத்துனை அழகு உனக்கெதற்கு!
இரசிகை ஆனேன் நானும் உனக்கு!



மு.ப. மிஹ்னாஸ் சீபா
தரம் - 8
திருகோணமலை

விரைவில்
வாசல் தொலைக்காட்சி
VAASAL TELEVISION
எதிர்பாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாசல் கவிதை சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீடு

வாசல் வாசல் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் வாசல் கவிதை சஞ்சிகையின் முதலாவது இதழ் கடந்த பங்குனி மாதம் (23.03.2023) வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெற்றது.








இந்நிகழ்வில், ஆசியுரையை திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதம குரு சோ. இரவிச்சந்திர குருக்கள் ஆசியுரை வழங்கியிருந்ததுடன், பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ. பார்த்தீபன் கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினராக தமிழ்நாட்டின் நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், கௌரவ விருந்தினராக மூத்த கவிஞர் அம்.கௌரிதாசன், வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ச. திருச்செந்தூரன், கவிஞர் யோகானந்தம், தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில், தமிழ்நாட்டின் நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், திருகோணமலை அன்புவழிபுரத்தை சேர்ந்த நாடகக்கலைஞர் சிவநாமம் ஜெயராசா ஆகியோர் கலைக்கேசரி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நந்தவனம் சஞ்சிகை இலங்கைச்சிறப்பிதழ் வெளியீடு

வாசல் வாசல் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இனிய நந்தவனம் சஞ்சிகையின் இலங்கை சிறப்பிதழ் 20.08.2023 (ஞாயிற்றுக்கிழமை) மாலை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ச.திருச்செந்தூரன், கவிஞர் க.யோகானந்தம், கவிஞர் தில்லைநாதன் பவித்ரன் உள்ளிட்டோர் உரையாற்றியிருந்தனர்.










இந்நிகழ்வில், திருகோணமலையை சேர்ந்த அனாமிகா பண்பாட்டு மையத்தின் நிறுவுனர் பேராசிரியர் பாலசிங்கம் சுகுமார், வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் சிரேஷ்ட உதவியாசிரியர் கந்தையா சிவராசா, கெப்பிட்டல் வானொலியின் முன்னாள் சிரேஷ்ட நிகழ்ச்சி முகாமையாளர் தில்லையம்பலம் தரணிதரன் உள்ளிட்டோர் கலைக்கேசரி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











உங்களது பிரதேசத்தில் இடம்பெறும் கலை இலக்கிய நிகழ்வுகளை பிரசுரிக்க வாசல் தயாராக உள்ளது. நிகழ்வுகள் பற்றிய விபரங்களை படங்களுடன் ச.திருச்செந்தூரன், பிரதம ஆசிரியர், வாசல் கவிதை இதழ், வாசல் வாசகர் வட்டம், *691/C*, அன்புவழிபுரம், திருகோணமலை எனும் முகவரிக்கோ, *vaasalvaasagar@gmail.com* எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ, 0767687107, 0778918096 ஆகிய வட்ஸ்அப் இலக்கங்களுக்கோ அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசல் வாசகர் வட்டத்தின் கலைக்கேசரி விருது – 2023



பாலசிங்கம் சுகுமார்
மேனாள் பேராசிரியர்
கிழக்கு பல்கலைக்கழகம்



கந்தையா சிவராசா
முன்னாள் சிரேஷ்ட உதவி ஆசிரியர்
வீரகேசரி



தில்லையம்பலம் தரணிதரன்
முன்னாள் சிரேஷ்ட நிகழ்ச்சி முகாமையாளர்
கெப்பிட்டல் வானொலி

## சந்தா விபரம்

தனி இதழ் : ரூபா. 300.00
ஆண்டு சந்தா : ரூபா. 1500.00
(தபால் செலவு உட்பட)

வங்கி கணக்கு இலக்கம் :
**S. Thiruchsenthooran**
**031020558338**
**HNB - Trincomalee Branch**

உங்களுடைய படைப்புக்களையும்,
விமர்சனங்களையும்
வாசல் ஆவலோடு எதிர்பார்க்கிறது.

# வாசல்

கவிதைக்கான காலாண்டு இதழ்

பிரதம ஆசிரியர் : ச. திருச்செந்தூரன்
நிர்வாகம் : வாசல் வாசகர் வட்டம்

முகவரி :
691/C, அன்புவழிபுரம், திருகோணமலை.
தொலைபேசி :
076 7687107, 077 8918096
மின்னஞ்சல் :
vaasalvaasagar@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org